மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

***திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு பேரணாம்பட்டு தொகுதியில் தேர்தலில் நிற்பதற்கு வாய்ப்பளித்து, எனக்காகப் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்த வாழும் வள்ளுவர், வரலாற்று நாயகர், தொல்காப்பியப் பூங்கா, தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவர், தமிழ் சமுதாயத்திற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், நாளைய நம்பிக்கை நட்சத்திரம் தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் அண்ணன் காந்தி அவர்களுக்கும்..

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) செல்ஃபோன் இயக்கம் நிறுத்தி வைத்தல்

(பேரவையில் செல்ஃபோன் மணி ஒலித்தது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது செல்ஃபோன்கள் வைத்திருந்தால் ஆஃப் பண்ணி வையுங்கள்.

7. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14 – எரிசக்தித் துறை—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 44 – சிறுதொழில்கள் துறை—தொடர்ச்சி

திரு. அ. சின்னசாமி: மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும் இந்தப் பேரவைக்கு என்னை உறுப்பினராக அனுப்பிய பேரணாம்பட்டு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தங்கள் பாதங்களில் காணிக்கையாக்கி என் உரையைத் தொடங்குகிறேன்.